02.04.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.15

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜன் | | |
| த/பெ | அரிகிருஷ்ணன் | | |
| கிராமம் | கள்ளக்குறிச்சி | தொழில் | |
| தாலுக்கா | கள்ளக்குறிச்சி | வயது | 55/2024 |
| மாவட்டம் | கள்ளக்குறிச்சி | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விழுப்புரம் மாவட்டம் சிறுவந்தாடு சோதனை சாவடியில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் அதே சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 6.05.2014ம் தேதி காவல் நிலைய பணிக்கு காலை 8 மணிக்கு நிலையம் வந்தேன். திருக்குமரன், பாலமுருகன், லோகேஷ் மற்றும் பாராகாவலர் பாரதி ஆகியோர் நிலையத்தில் இருந்தோம். பகலில் நான் சிறப்பு உதவி ஆய்வாளராக காவல் நிலைய பொறுப்பில் இருந்தேன். அப்போது ஆய்வாளர் வாசுதேவன், எஸ் எஸ் ஐ திரு. அசோகன் மற்றும் சிலர் திருச்சிக்கு டி எஸ் பி மீட்டிங்கிற்கு சென்றிருந்தார்கள். காவல் நிலையத்தில் பாராகாவலர் மட்டும் இருந்தார். அப்போது ரயில்வே நடைமேடையில் இருந்த ஒருவருடைய பர்ஸ்யை காணவில்லை என்று காவல் நிலையத்தில் தெரிவித்ததன் பேரில் வேறு ஒரு நபரை அழைத்து வந்தார்கள். அழைத்து வந்து விசாரித்தார்கள். ஜெயவேல் என்பவரை விசாரித்தார்கள். அதன் பிறகு ஜெயவேலும் மற்ற காவலர்களும் காவல் நிலையத்தில் இருந்தார்கள். எனக்கு இரவு ரோந்து பணி என்று சொன்னதால் ரயில்வே நிலையத்தில் பீட் சோதனை இரவு 8 மணி முதல் மறுநாள் 7.5.2014 காலை 8 மணி வரை பணியில் இருந்தேன்.

அப்போது சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வெடி குண்டு வெடித்தது தொடர்பாக அனைத்து ரயில் நிலையங்களிலும் சோதனை செய்ய மேல் அதிகாரிகள் உத்தரவு இட்டதால் உள்ளூர் காவலர்கள், நாங்கள் அனைவரும் சேர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு.இருந்தோம். காலை 7.30 மணிக்கு பணி முடிந்து காவல் நிலையம் வந்தேன். அப்போது ஜெயவேல் பசி எடுக்கிறது என்று சொன்னார். அதனால் நானே எதிரில் உள்ள டீ கடைக்கு சென்று டீ வாங்கி வந்து அவரிடம் கொடுத்து விட்டு நான் வீட்டிற்கு சென்ற போது எனக்கு மதியம் 1 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து போன் வந்தது. ஜெயவேல் இறந்து விட்டார் என்று எனக்கு போன் வந்தது. அதன் பிறகு நான் நேராக காவல் நிலையம் வந்து விட்டேன். அப்போது பாராவில் பாரதி என்பவர் இருந்தார். அதன் பிறகு சம்பவம் குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு திருச்சியில் இருந்து எங்களது அதிகாரிகள் வந்தார்கள். வந்த அதிகாரிகளிடம் நான் இதுபோன்று இருக்கிறது என்று சொன்னேன். நான் அவர்களிடம் மேற்கண்ட நடந்த நிகழ்ச்சிகளை சொன்னேன். எங்களுடைய எஸ் பி மற்றும் அதிகாரிகள் விசாரித்தார்கள். மேல் அதிகாரிகள் காவல் நிலையத்தில் இருந்த மற்ற அதிகாரிகளையும் ஜெயவேல் இறந்தது தொடர்பாக விசாரித்தார்கள். மேலும் என்னை விழுப்புரம் மற்றும் வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

01.05.2014 தேதியில் தான் சென்னை ரயில்வே நிலையத்தில் குண்டு வெடிப்பு நடந்தது என்றால் சரிதான். அதன் பிறகு தொடர்ச்சியாக ரயில்வே போலீஸ், மாவட்ட லோக்கல் போலீஸ் ஆகியோர் ஒரு ஆய்வாளர் தலைமையில் 1ம் தேதி முதல் 7ம் தேதி வரை ரோந்து பணி செய்தார்கள் என்றால் சரிதான். நான் காவல் துறை விசாரணையிலும், சிபி சிஐடி விசாரணையிலும் இந்த தகவலைதான் சொன்னேன்.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சிபிசிஐடி போலீசார் 6ம் தேதி மாலையில் இருந்து அடுத்த நாள் 7ம் தேதி காலை 8 மணி

வரைக்கும் எனக்கு காவல் நிலையத்தில் பணி இருந்தது. நான் நடைமேடை பணி செய்து வந்தேன். 6ம் தேதி காலையில் எனக்கு பணி கிடையாது. காலையிலேயே என்னிடம் இத்தனை மணியில் இருந்து இத்தனை மணி வரை பணி உங்களுக்கு உள்ளது என்றும் நீங்கள் நேரடியாக பணி இடத்திற்கு செல்லுங்கள் என்றும் கூறி விடுவார்கள். அதன் படி நான் மாலை வீட்டிலிருந்து நேரடியாக காவல் நிலையம் வந்து அதன் பிறகு நடைமேடை பணிக்கு சென்றேன். என்னை விசாரித்தபோது நான் இந்த வழக்கு சம்மந்தமாக நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் எதுவும் அளிக்க வில்லை. என்னை சிபிசிஐடி போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சிபிசிஐடி போலீசார் விசாரித்த போது நான் காவல் நிலையத்தில் இருக்கும்போது ஜெயவேல் டீ கேட்டார் நான் தான் வாங்கி கொடுத்தேன் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. என்னிடம் சிபிசிஐடி போலீசார் எந்த வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. என்னை விசாரித்தார்கள். பொதுவாக எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக ஒன்றும் தெரியாது என்றும் நான் சாட்சியை சுயநினைவுடன் இல்லாமல் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2,4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.,**